12TH STD

## முன் மாதிரி இரண்டாம் இடைப் பருவத் தேர்வு --- 1

UNIT : 8 and 9

### கணக்குப்பதிவியல்

நேரம் : 1.15 மணி — மதிப்பெண் : 45

### பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $10 \times 1 = 10$

1. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது
   அ) பணம்சாரா தகவல்கள் ஆ) கடந்தகால தகவல்கள்
   இ) குறுகியகால தகவல்கள் ஈ) நீண்டகால தகவல்கள்
2. பின்வருவனவற்றில் எது நிதிநிலைப் பகுப்பாய்வின் ஒரு கருவி அல்ல?
   அ) போக்குப் பகுப்பாய்வு ஆ) பொது அளவு அறிக்கை
   இ) ஒப்பீட்டு அறிக்கை ஈ) நிர்ணயிக்கப்பட்ட அடக்க விலையியல்
3. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது அல்ல?
   அ) நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் அனைத்தும், நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்விற்கும் பொருந்தும்.
   ஆ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு ஒரு வழிமுறை, இது ஒரு முடிவல்ல.
   இ) நிதி நிலைஅறிக்கை பகுப்பாய்விற்கு நிபுணத்துவம் தேவையில்லை.
   ஈ) ஆய்வு செய்யப்பட்ட தகவல்களை உய்த்துணர்வது தனிப்பட்ட கருத்துகளை உள்ளடக்கியதாகும்.
4. ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை ₹. 1,25,000 லிருந்து ₹. 1,50,000 க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது?
   அ) + 20 % ஆ) + 120 % இ) - 120 % ஈ) - 20 %
5. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில், நீண்டகாலச் பொறுப்புகளின் சதவீதம் 20 எனில், நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?
   அ) 20 ஆ) 120 இ) 80 ஈ) 100
6. ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது --------------
   அ) முடிவு ஆ) விகிதம் இ) மாதிரி ஈ) தீர்மானம்
7. நடப்புப் பொறுப்பு ₹. 40,000 ; நடப்புச் சொத்து ₹. 1,00,000 ; சரக்கிருப்பு ₹. 20,000 எனில் விரைவு விகிதம்
   அ) 1:1 ஆ) 2.5:1 இ) 2:1 ஈ) 1:2
8. சரக்கிருப்பு மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் நீங்கலாக உள்ள நடப்புச் சொத்துகள் அழைக்கப்படுவது
   அ) காப்புகள் ஆ) புலனாகும் சொத்துகள் இ) நிதி ஈ) விரைவு சொத்துகள்



9. பட்டியல் ஒன்றை பட்டியல் இரண்டுடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| பட்டியல்I | பட்டியல்II |
|---|---|
| (i) நடப்பு விகிதம் | 1. நீர்மைத் தன்மை |
| (ii) நிகர இலாப விகிதம் | 2. செயல்திறன் |
| (iii) புற அக பொறுப்புகள் விகிதம் | 3. நீண்டகால கடன் தீர்க்கும் திறன் |
| (iv) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் | 4. இலாபத்தன்மை |

குறியீடுகள்:

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 4 | 3 | 2 |
| ஆ) | 3 | 2 | 4 | 1 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 1 | 2 | 3 | 4 |

10. பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துகளுக்கும் உள்ள விகிதாச்சாரம்
    அ) உரிமையாளர் விகிதம் ஆ) முதல் உந்துதிறன் விகிதம்
    இ) புற அக பொறுப்பு விகிதம் ஈ) நடப்பு விகிதம்

### பகுதி --- II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 16- க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $4 \times 2 = 8$

11. நிதிநிலை அறிக்கைகள் யாவை?
12. விகித பகுப்பாய்வின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளைத் தரவும்.
13. கோபால் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2017 மாரச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பொது அளவு அறிக்கை வருமான அறிக்கையை தயார் செய்யவும்

| விவரம் | 2016 - 2017 (₹) |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 80,000 |
| இதர வருமானம் | 60,000 |
| செலவுகள் | 20,000 |

14. கார்த்திகா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதத்தைக் கணக்கிடவும்.
    1) அவ்வாண்டில் விற்பனைமூலம் பெற்ற வருவாய் ₹. 30,000
    2) அவ்வாண்டின் இறுதியில் நிலைச்சொத்துகள் ₹. 3,000.
15. பின்வரும் விவரங்களைக் கொண்டு முதலீடு மீதான வருவாய் கணக்கிடவும்.
    a) வட்டி மற்றும் வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபம் ₹. 20,000
    b) பயன்படுத்தப்பட்ட முதல் ₹. 50,000.

16. கீழ்கண்ட தகவல்களிலிருந்து விடுபட்ட தொகையினையும், சதவீத மதிப்பையையும் நிரப்புக.

2019, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு வருவாய் அறிக்கை

| விவரம் | மரியா நிறுமம் | | கலா நிறுமம் | |
|---|---|---|---|---|
| | தொகை ₹. | விற்பனை மூலம் பெற்ற வருவாயின் சதவீதம் | தொகை ₹. | விற்பனை மூலம் பெற்ற வருவாயின் சதவீதம் |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 1,00,000 | ----- | 2,00,000 | 100 |
| கூட்டுக : இதர வருமானம் | 10,000 | 10 | ----- | 15 |
| மொத்த வருவாய் | ------- | ----- | 2,30,000 | 115 |
| கழிக்க : செலவுகள் | ------ | 70 | 1,20,000 | ------- |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 40,000 | ----- | ----- | 55 |

## பகுதி - III

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 3 = 12

17. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளைப் பட்டியலிடவும்.

18. முதலீடுகள் மீதான வருவாய் விகிதம் எதைக் குறிப்பிடுகிறது?

19. பாபு நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்க

| விவரம் | 2016 - 2017 (₹) | 2017 -2018 (₹) |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 80,000 | 1,00,000 |
| இயக்கச் செலவுகள் | 20,000 | 30,000 |

20. கமலா வரையறு நிறுமத்தின் 2018, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக்குறிப்பு தயார் செய்யவும்

| | விவரம் | தொகை ₹. |
|---|---|---|
| I. | **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| | பங்குதாரர் நிதி | 80,000 |
| | நடப்பு பொறுப்புகள் | 20,000 |
| | **மொத்தம்** | 1,00,000 |
| II. | **சொத்துகள்** | |
| | நீண்டகாலச் சொத்துகள் | 60,000 |
| | நடப்புச் சொத்துகள் | 40,000 |
| | **மொத்தம்** | 1,00,000 |



21. விற்பனை மூலம் பெற்ற வருவாய் ₹. 50,000; இயக்க அடக்கம் ₹. 20,000. எனில், இயக்க இலாப விகிதம் காணவும்.

22. பின்வரும் விவரங்களிலிருந்து நடப்பு விகிதத்தினை கண்டறியவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| குறுகிய முதலீடுகள் | 4,000 | வணிக கடனீந்தோர் | 5,000 |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 1,000 | சரக்கிருப்பு | 2,000 |

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 3 × 5 = 15

23. மகேஷ் நிறுமத்தின் பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து 2016 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 ஆம் நாளொடு முடிவடையும் ஆண்டுக்குரிய ஒப்பீட்டு இருப்புநிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2016 மார்ச் 31 ₹. | 2017 மார்ச் 31 ₹. |
|---|---|---|
| 1. **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| பங்குதாரர் நிதி | 4,00,000 | 4,40,000 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 1,50,000 | 1,65,000 |
| நடப்பு பொறுப்புகள் | 75,000 | 82,500 |
| **மொத்தம்** | 6,25,000 | 6,87,500 |
| 2. **சொத்துகள்** | | |
| நீண்டகாலச் சொத்துகள் | 5,00,000 | 6,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 1,25,000 | 87,500 |
| **மொத்தம்** | 6,25,000 | 6,87,500 |

( அலலது )

நிவேதா வரையறு நிறுமம் மற்றும் கவிதா வரையறு நிறுமத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக்குறிப்பு தயார் செய்யவும்.

| | விவரம் | நிவேதா நிறுமம் ₹. | கவிதா நிறுமம் ₹. |
|---|---|---|---|
| I. | **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| | பங்குதாரர் நிதி | 3,50,000 | 5,00,000 |
| | நீண்டகாலப் பொறுப்புகள் | 2,80,000 | 3,50,000 |
| | நடப்பு பொறுப்புகள் | 70,000 | 1,50,000 |
| | **மொத்தம்** | 7,00,000 | 10,00,000 |
| II. | **சொத்துகள்** | | |
| | நீண்டகாலச் சொத்துகள் | 4,90,000 | 6,00,000 |
| | நடப்புச் சொத்துகள் | 2,10,000 | 4,00,000 |
| | **மொத்தம்** | 7,00,000 | 10,00,000 |

24. பின்வரும் விவரங்களைக் கொண்டு குறிஞ்சி வரையறு நிறுவனத்தின் போக்குப் சதவீதங்களைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹. ஆயிரங்களில் | | |
|---|---|---|---|
| | 2015 - 2016 | 2016 - 2017 | 2017 - 2018 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 200 | 300 | 400 |
| இதர வருமானம் | 100 | 150 | 200 |
| செலவுகள் | 200 | 100 | 200 |

( அலலது )

கண்ணன் நிறுமத்தின் 31.03.2019 ஆம் நாளைய பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து, (i) புற அக பொறுப்புகள் விகிதம் (ii) உரிமையாளர் விகிதம் மற்றும் (iii) முதல் உந்துதிறன் விகிதம் கணக்கிடவும்.

**கண்ணன் நிறுவனத்தின் 31.03.2019 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| 1. **பங்குதாரர் நிதி** | |
| அ) பங்கு முதல் | |
| நேர்மைப் பங்குமுதல் | 1,50,000 |
| 8% முன்னுரிமைப் பங்குமுதல் | 2,00,000 |
| ஆ) காப்பும் மிகுதியும் | 1,50,000 |
| 2. **நீண்டகாலப் பொறுப்புகள்** | |
| நீண்டகாலக் கடன்கள் ( 9% கடனீட்டுப் பத்திரங்கள் ) | 4,00,000 |
| 3. **நடப்பு பொறுப்புகள்** | |
| கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 1,00,000 |
| **மொத்தம்** | **10,00,000** |
| **சொத்துகள்** | |
| 1. **நீண்டகால சொத்துகள்** | |
| அ) நிலைச் சொத்துகள் | 7,00,000 |
| ஆ) நீண்டகால முதலீடுகள் | 50,000 |
| 2. **நடப்புச் சொத்துகள்** | |
| அ) சரக்கிருப்பு | 2,00,000 |
| ஆ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 50,000 |
| **மொத்தம்** | **10,00,000** |



25. கண்மணி நிறுமத்தின் கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து சரக்கிருப்பு சுழற்சி விகிதம் மற்றும் சரக்கிருப்பு மாற்று காலத்தை (மாதங்களில்) கணக்கிடவும்.

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 1,50,000 |
| அவ்வாண்டில் தொடக்கச் சரக்கிருப்பு | 60,000 |
| அவ்வாண்டில் இறுதிச் சரக்கிருப்பு | 20,000 |
| அவ்வாண்டில் மேற்கண்ட கொள்முதல் | 70,000 |
| உள் தூக்கு கூலி | 10,000 |

( அலலது )

முகேஷ் நிறுமத்தின் பின்வரும் இலாபம் நட்டஅறிக்கையிலிருந்து (i) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் கணக்கிடவும்.

**முகேஷ் நிறுமத்தின்இலாபநட்டஅறிக்கை**

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| I. விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 6,00,000 |
| II. இதர வருமானம்: முதலீடு மூலம் வருவாய் | 20,000 |
| III. **மொத்த வருவாய்** ( I + II ) | **6,20,000** |
| IV. **செலவுகள்:** | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 1,60,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 40,000 |
| பணியாளர் நலன்களுக்கான செலவுகள் | 10,000 |
| இதர செலவுகள் | 50,000 |
| வரி ஒதுக்கு | 30,000 |
| **மொத்த செலவுகள்** | **2,90,000** |
| V. **அவ்வாண்டிற்கான இலாபம்** ( III - IV ) | **3,30,000** |